# கதை கதையாம் காரணமாம்





**தமிழ் ஐயா வெளியீட்டகம்**


ஔவைக்கோட்டம், திருவையாறு - 613 204

தஞ்சாவூர் மாவட்டம்.

## பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| | **அ. கதைத்தமிழ் மரபுகள்** | |
| 1. | கதைத் தமிழ் வளர்ச்சியும் வகைப்பாடுகளும் — முனைவர் மு. கலைவேந்தன் | 1 |
| 2. | கதை கதையாம் — முனைவர் சரசுவதி இராமநாதன் | 10 |
| 3. | குழந்தை வளர்ப்பில் கதைகள் — முனைவர் இரா. சாக்குலின் மேரி | 12 |
| 4. | கதை பிறந்த கதை — நா. உமாமகேசுவரி | 19 |
| 5. | தமிழிலக்கியக் கதைகளில் சமயப்பொறை — இரா. நிசா | 24 |
| 6. | குழந்தை இலக்கியக் கதைகளின் வழி குழந்தைகளின் உளவியல் — முனைவர் வெ. சுகந்தா | 31 |
| 7. | கதை வரலாற்றுத் தாக்கம் வருங்கால நோக்கம் — அ. ரோசிலின்மேரி | 37 |
| 8. | தன் வரலாறும் கதை இலக்கியமும் — முனைவர் கு. முத்துக்குமார் | 42 |
| 9. | தொல்காப்பியம் காட்டும் கதைக்கூறுகளும் மாந்தர்களும் — ந. பெரியசாமி | 46 |
| 10. | குறிஞ்சிப்பாட்டில் கதைக்கூறுகள் — முனைவர் இரா.சி.சுந்தரமயில் | 51 |
| 11. | சங்க இலக்கியங்களில் கதைக் கூறுகள் — முனைவர் ச.கௌ.கவிதா | 57 |
| 12. | சங்கப் பாடல்களில் தொன்மக் கதைகள் — ச. அரங்கராசன் | 61 |
| 13. | குறிஞ்சிப்பாட்டில் சிறுகதைக் கூறுகள் — முனைவர் க.பழனிவேல் | 64 |
| 14. | குறுந்தொகை காட்டும் கதை நிகழ்வும் கதைப் போக்குக் கூறுகளும் — முனைவர் அருவி. தேன்மொழி | 71 |

# 8. தன் வரலாறும் கதை இலக்கியமும்



**முனைவர் கு.முத்துக்குமார்**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர்*

**முன்னுரை**

மாந்தன் இனத்தின் வாழ்வியல் நெறிகளுள் ஒன்று புனைவு இலக்கியம் எனும் கதை சொல்லல் மரபு ஆகும். பிறந்தது முதல் வளர்ந்து இச்சமூகக்கட்டமைப்பைப் புரிந்து வளர்வதற்கும் தனது சமூகத்தின் நடப்புகளை அறிந்துக் கொள்ளவும் தனது இருப்பை நிலைப்படுத்திக் கொள்ளவும் அச்சமூகத்தில் முகிழ்ந்த இலக்கியங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. புனைவு என்ற சொல்லே கற்பனைத்திறனோடு கூடிய படைப்பு என்ற பொருள் கொண்டாலும் மனிதன் தான் தொட முடியாத உச்சங்களை அனுபவங்களைத் தனது சிந்தனை மூலம் அடைவதற்கு இந்தப் புனைவுகளும் ஒரு கருவியாகிறது. எவ்வாறாயினும் இச்சமூகத்தின் அனுபவங்களுக்குள்ளே இருந்துதான் படைப்பாளியின் எண்ணங்கள் வழியே அப்புனைவு உருவாகிறது. எவ்வாறு ஒரு மனிதனை இச்சமூகம் கட்டமைக்கிறதோ அதைப்போலவே கலை, இலக்கியங்கள் இச்சமூகத்தைக் கட்டமைக்கின்றன. பிற்காலத்தில் இவ்வகைக் கலைகளின் வாயிலாகவும் இலக்கியங்கள் வாயிலாகவும் மாந்த இனத்தின் வரலாறு உருவாக்கப்பட்டது. இவ்வாறாக இலக்கியங்கள் மனித வரலாற்றில் பிரிக்க முடியாத காரணிகளாக மாறிவிட்டன.

ஆளும் வர்க்கத்தினரைப் போற்றிப் புகழ்ந்து பாடும் இலக்கியம் மேலை இலக்கியங்களில் விதந்து போற்றப்பட்ட காலத்தில் மக்களின் அக, புற வாழ்க்கையை இலக்கியங்களாகப் படைக்கும் முறைக்குப் பண்டைய காலத்தில் தமிழ்நாட்டில் பாட்டும் தொகையும் சான்றாகத் திகழ்கின்றன. கவிதைப்பாங்கும் அதில் நாடகப்பாங்கும், கதைப்பாங்கும் பின்னியபடி காட்சிகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. கதை சொல்லும் மரபு மக்களிடையே சங்க காலத்தில் இருந்து தொடர்ந்து வந்ததற்குப் பாணர்களும், விறலியர்களும், கூத்தர்களும் சான்றாகத் திகழ்கின்றனர். மக்களின் வாழ்வியலிலும் போர்க்களங்களிலும் அரசவைகளிலும் சங்கச் சமூகம் இவர்களை முதன்மைப்படுத்தின. இவர்கள் சமூகத்தின் ஒரு